# போலி சான்றிதழுடன் ஆசிரிய நியமனமா?

(எப். சி. ஆர்.)

அண்மைக் காலத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் கல்வி தராதரப் பத்திரங்களை பரிசிலனை செய்யுமாறு கல்வி அமைச்சு மாகாண கல்விப்பணிப்பாளர்களைப் பணித்துள்ளது. புதிதாக ஆசிரிய நியமனத்திற்கு தெரிவாகியுள்ள பலர் போலி கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து ஆசிரிய நியமனத்தைப் பெற்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டையடுத்தே கல்வி அமைச்சு இப்பணிப்புரையை வழங்கியுள்ளதாகத்தெரியவருகின்றது. இப்பணிப்புரையை அடுத்து அண்மைக்காலத்தில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களின் கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தர, உயர்தர சான்றிதழ்கள் யாவும் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு மூலப்பிரதியுடன் பரிசீலிக்கப்படவுள்ளன. அத்துடன் பட்டதாரி ஆசிரியர்களின் பட்டதாரிச் சான்றிதழ்களும் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்படவுள்ளன.

விலை ரூபா 2·50 பக்கங்கள் எட்டு

# முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

முரசு 03 ஒலி 165 சனி 24-06-1989 (ஆனி 10) துல் ஹஜ்.தா 19

## இருவருட சம்பள முற்பணம் யாழ். ஆசிரியர்கள் பெறுவர்

(எப். சி. ஆர்.)

யாழ். மாவட்டத்தில் இரண்டுவருட சம்பள முற்பண கடனைக் கோரி விண்ணப்பித்த ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்கள் ஆகியோரில் ஒரு பகுதியினருக்கு விரைவில் அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. கடன்கள், முற்பணங்கள் என்பவற்றை வழங்குவதற்காக மத்திய கல்வி அமைச்சு பதின்மூன்று மில்லியன் ரூபா முதல்கட்ட நிதி ஒதுக்கீட்டை யாழ். கல்வித்திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. இந்த நிதியொதுக்கீட்டிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் இரண்டுவருட — 8 ஆம் பக்கம் பார்க்க

★ உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஜனாதிபதி உரை

# அமைதிப்படை விலகாவிடின் முகாமினுள் முடங்கவேண்டும்!

## கட்டளையிடப்போவதாக ஜனாதிபதி அறிவிப்பு வெளிநாட்டு உதவி பெறப்படும் என தெரிவிப்பு

(கொழும்பிலிருந்து நிருபன்)

இலங்கையிலிருந்து அமைதிப்படை அடுத்தமாத முடிவுக்குள் வெளியேறுவிட்டால் இந்திய இராணுவம் தமது முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்க நேரிடும் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

நேற்று மகியங்கனையில் நடைபெற்ற கம்உதாவ கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்படி வலியுறுத்தினார்.

என்றுமில்லாதவாறு நேற்று ஜனாதிபதி தமது உரையின் போது உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்தியா தனது படைகளை அடுத்த மாத இறுதிக்குள் அழைத்துக்கொள்ள வேண்டும் அல்லாவிடின் படைகள் முகாமிற்குள்ளேயே தங்க வேண்டியிருக்கும். இதன் பின்னர் இந்தியப்படைகள் —8 ஆம் பக்கம் பார்க்க

## 8 ரூபாவிற்கு மேல் மா விற்றால் கடும் நடவடிக்கை

(எப். சி. ஆர்)

யாழ். மாவட்டத்தில் கோதுமை மாவை கட்டுப்பாட்டு விலைக்கும் அதிகமாக விற்கும் வியாபாரிகளின் மேல் கடுமையான நடவடிக்கையெடுக்கப்படுமென உணவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் எந்தவொரு வியாபாரியும் ஒரு கிலோ கோதுமை மாவினை எட்டு ரூபாவுக்குமேல் விற்பனை செய்யக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை திருகோணமலை பிறிமா மா ஆலையிலிருந்து ஆயிரம் மெட்ரிக் தொன் கோதுமை மா நேற்று லொறி மூலம் இங்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் அனுராதபுரத்திலிருந்து நேற்று ரயில் → 8 ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் ரயிலில் வந்தது

அனுராதபுரத்திலிருந்து நேற்று பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த சரக்கு ரயிலில் போதியளவு எரிபொருள் இங்கு வந்து சேர்ந்தது. இவற்றை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கும் வேலைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதாக பெற்றோலியம் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்-கொழும்பு தனியார் பஸ் நொச்சியாகமத்தில் தீக்கிரை

(வவுனியா)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த தனியார் சொகுசு பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புத்தளம் நொச்சியாகமத்திற்கும் இடையில் இனந்தெரியாத ஒரு கூட்டத்தினரால் இந்த பஸ் வழி மறிக்கப்பட்டது. பயணிகள் இறக்கப்பட்டதும் பஸ் வண்டியை அக்கூட்டத்தினர் தீயிட்டு கொளுத்தினர். → 8 ஆம் பக்கம் பார்க்க

## ஈரோஸ் இயக்கத்தினர் மூவர் தெல்லிப்பளையில் வைத்து கைது

நேற்று முன்தினம் மாலை தெல்லிப்பளையில் உள்ள ஈரோஸ் இயக்க 'லேத்' தொழிற்சாலையில் இருந்து மூன்று ஈரோஸ் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யோன்சன், யோசப், சந்திரன் ஆகிய மூவரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். இதே சமயம் நேற்று முன் தினம் — 8 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. சாதாரண பரீட்சை முடிவுகள் இன்று வெளிவரும்

கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற புதிய, பழைய பாடத்திட்ட க. பொ. த. சாதாரணதர பரீட்சை முடிவுகள் இன்று அல்லது நாளை சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதிபர்கள் கல்வி அலுவலகங்களுக்கு சென்று பரீட்சை பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளுமாறு பரீட்சைத் திணைக்களம் கேட்டுள்ளது. → 8 ஆம் பக்கம் பார்க்க

## இன்று யாழ்தேவி ரயில் இல்லை

கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான யாழ்தேவி ரயில் சேவை நேற்று நடைபெறவில்லை. இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கான யாழ்தேவி ரயில் சேவையும் இன்று நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான யாழ்தேவி ரயில் சேவை நடைபெறுமா என் —8 ஆம் பக்கம் பார்க்க

## முகமூடி கொமாண்டோக்கள் புத்தளத்தில் மக்கள் மீது சூடு

புத்தளத்தில் மக்கள் முகமூடி அணிந்தவர்களால் பயமுறுத்தப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு புத்தளம் நகருக்கு வந்து மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்துள்ளனர். பொலிஸ் கொமாண்டோக்களே இவ்வாறு வந்துள்ளனர் இவ்வாறு ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நேற்று பாராளுமன்றத்தில் →8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்டத்திற்கு 3500 ஆசிரியர் தேவை 1500 ஆசிரியர்களை மட்டுமே நியமிக்க அனுமதி

(எப். சி. ஆர்)

இருபத்தி ஐயாயிரம் ஆசிரிய பயிலுநர்களை நியமிக்கும் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்தி ஐந்நூறு பேருக்கு மட்டுமே ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. யாழ். மாவட்டத்தில் மூவாயிரத்தி ஐந்நூறு ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருந்தபோதிலும்மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆயிரத்தி ஐந்நூறு பேரை மட்டுமே ஆசிரிய பயிலுநர்களாக நியமிக்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளதாம். இதனால் இங்கு இப்பதவியை பெறுதற்கு பலத்த போட்டியேற்படக்கூடிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. — 8 ஆம்பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து குப்பை கூளங்களை அகற்றுவதற்கு உழவு இயந்திரம் (சாரதி, ஏற்றியிறக்குதல் உட்பட) வாடகைக்குத் தேவைப்படுகிறது.

விருப்பமானோர் பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளருடன் 28. 06. 1989 முற்பகல் 10.00 மணிக்குமுன் தொடர்பு கொள்ளவும்.

சகல கேள்விதாரரும் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 500/- செலுத்த வேண்டும். தெரிவு செய்யப்படும் உழவு இயந்திர உரிமையாளருக்கு இப் பணம் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபின்பே மீளளிக்கப்படும்.

பதில் பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

06248

KOSHIN PUMPS

தேவைக்கேற்ற கையடக்கமான பம்ப்

"KOSHIN PUMPS"

- ★ அதிகுறைந்த மின்சக்தி, கூடிய வலு
- ★ 100 அடி உயரத்துக்கு தண்ணீரைத் தள்ளவும் 25 அடி ஆழத்தில் இருந்து தண்ணீரை இழுக்கும் சக்தியும் கொண்டது.
- ★ குழாய்க் கிணறுகளுக்கும் பாவனைக்கு உகந்தது
- ★ முக்கிய விபரங்கள்

R. P. M 7900/250

சக்தி 1200 கலன் ஒரு மணித்தியாலத்தில்

யப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு இன்றே நாடுங்கள்

General Trade Agencies
(PVT) LTD
"சென்றல் கிளினிக்"
193, Power House Road Jaffna

06218

### சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சிசில் டீப் பிரீசர் (Deep Freezer) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பற்றிமா ஸ்ரோர்ஸ், மாதகல். 06245

**விற்பனைக்கு**

தடுப்பூசி, பூச்சி மருந்து கொடுக்கப்பட்டதுமான நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 107, கலைமகள் வீதி, கல்வியங்காடு.

06246

### தற்காலிக வேலை நீக்கம்

வெள்ளவாய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ,பதினைந்து கான்ஸ்டபிள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வெள்ளவாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில். டி.சேரம் கொலை செய்யப்பட்டமை உட்பட அப்பகுதியில் இடம் பெற்ற பல குற்றச் சம்பவங்கள் தொடர்பாக இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் இந்த இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்தே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

### தேன் 'சீஸன்'

மஹியங்கனை, பிபிலை, சொர்ணதோட்ட,வத்தல முதலிய வெள்ளவாயாப் பகுதிகளில் தேன் 'சீசன்' தொடங்கிவிட்டது. நமுனகுல காட்டுப் பிரதேசம் தேன்கூடும் மெழுகும் நாள்முழுவதும் தேடுவோரால் நிரம்பியுள்ளது. பதுளையில் சுத்தமான தேன் ஒருபோத்தல் 100/- விலைக்கு விற்கப்படுகிறது.

### பிரிவுபசாரம்

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் தபால் பரிசோதகராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திரு. பா. அருள்ராஜாவுக்கு யாழ். தபால்நிலைய தபால் தந்தி ஊழியர் பிரிவுபசாரக் குழுவால் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பிரிவுபசார விழா நடாத்தப்பட இருக்கிறது.

## கந்தசாமியின் நினைவாக தெல்லிப்பழையில் அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

மனித உரிமைகள் கழக ஊழியர்சட்டதரணிகந்தையா கந்தசாமியின் முதலாவது ஆண்டு தினம் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கல்யான மண்டபத்தில் அனுட்டிக்கப்பட்டது.

மறைந்தசமூகத்தொண்டன் கந்தசாமியின் முதலாவது ஞாபகார்த்ததினத்தை குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் மனித உரிமைகள் இல்லம், தகவல் சேகரிப்பு நிலையம் போன்ற பொதுஸ்தாபனங்கள், அவரது சேவையால் பயனடைந்தவர்கள் எனப்பல தரப்பட்டவர்களும் பெருந்தொகையாக கலந்து அமைதியாகநினைவுகூர்ந்தனர்

தெல்லிப்பழை துர்க்கா மகளிர் இல்ல மாணவிகளின் பத்திப்பாடல் இசைப்புடன் அனுட்டானம்ஆரம்பிக்கப்பட்டது அவரதுசமூகப்பணிகளைக் கௌரவித்து அஞ்சலிப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

ஞாபகார்த்த வைபவத்தை மனித உரிமைகள் இல்லத்தின் ஏற்பாட்டில் துர்க்காபுரத்தில் ஆத்மசாந்திக்கானபிரார்த்தனையும் அன்னதானமும் நடத்தப்பட்டன.

## முதலாவது பிறந்த நாள்

### 24 - 06 - 1989



★ செல்வ பிரான்ஸினி ★

தாளையடியைச் சேர்ந்த பிரான்சிஸ் வனஜா தம்பதிகளின் அருந்தவப்புதல்வி செல்வ பிரான்ஸினியை அப்பா, மம்மி, தொட்டப்பா, தொட்டம்மா, அம்மப்பா, அப்பம்மா, அப்பப்பா, பெரிய மாமி, பெரிய மாமா, சின்ன மாமி, சின்ன மாமா, சின்னப்பா, சின்னம்மா, ஆசையப்பா, ஆசையம்மா, குட்டி ஐயா, பெரியமம்மி, பெரிய பப்பா, சின்ன மம்மி, பெரிய சித்தி, சின்னச் சித்தி, சித்தப்பாமார், சவுதி சின்ன மாமா, சின்ன அத்தை, குட்டி மாமா, அத்தான் மார், மச்சாள் மார், அக்கா மார், அண்ணாமார், நவம் அம்மா, நவம் ஐயா, நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

06237

LML வெஸ்பா பாவனையாளருக்கு

ஓர் முக்கிய அறிவித்தல்

எமது யாழ்ப்பாண முகவர்

V. K. இராசரத்தினம்

மட்டும் தான்

வேறு முகவர்கள் எமக்கு இல்லை என்பதை அறியத்தருகிறோம்

Swift Wheel PVT Ltd

331, Union Place Colombo-2

இப்பொழுது புதிய மொடல்

LML வெஸ்பா - T5

கையிருப்பில் உண்டு

V.K.இராசரத்தினம்

95, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

06254

## திருமண அழைப்பிதழ்

உ

அன்புடையீர்,

நிகழும் சுக்கில வருடம் ஆனித்திங்கள் 17-ம் திகதி (01-07-1989) சனிக்கிழமை முற்பகல் 10. 30 நிமிஷம் முதல் 11. 04 நிமிஷமளவில் வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பாலசுப்பிரமணியம்** | **ரதிகுமாரி** |
| (கிளை மேற்பார்வையாளர் ப. நோ. கூ. சங்கம், பூநகரி) | (ஆசிரியை, மகளிர் வித்தியாலயம், எருக்கலம்பிட்டி) |

திருவருளின் துணையோடு நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் இனிது நடைபெற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| க. வேதவனமும் | ஐ. தியாகராசாவும் |
| பாரியாரும் | பாரியாரும் |
| ஆலங்கேணி, | 11/8, நல்லூர் வடக்கு, |
| பூநகரி. | யாழ்ப்பாணம். |

06251

நல்வாக்கு,

புகழ் ஆற்றைப்போல் தோன்றுமிடத்தில் ஒடுங்கியது, ஆனால் அது நீண்டு ஓடிச் செல்லும் தோறும் அகன்று செல்கிறது.

-- டாவனேனட்

ஆர். ஜி. பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# இதயநாதம்

## 'ராக்கிங்' என்ற கத்தி

பல்கலைக்கழகங்களின் புதிய கல்வியாண்டுகள் ஆரம்பமாகும் போதெல்லாம் 'ராக்கிங்' பிரச்சனைகளும் ஆரம்பமாகிவிடும்.

புதிய மாணவர்களை பழைய மாணவர்கள் வரவேற்கும் பாணியை 'ராக்கிங்' என்று அழைப்பர்.

இதைத் தமிழில் 'பகிடிவதை' என்றும் அழைப்பர்.

இந்த 'பகிடிவதை' சித்திரவதையாகும் போதே பிரச்சனைகள் உருவாகின்றன.

பத்து ஆண்டுகளுக்கு முன் பேராதனை வளாகத்தில் மாணவி ஒருவர் 'ராக்கிங் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டபோதும்; இருவருடங்களுக்கு முன் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் 'ராக்கிங்' பிரச்சனையால் இருமாணவர் கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களாலும் 'ராக்கிங்' பற்றிய விவகாரம் விவாதத்துக்குரியதானது

'ராக்கிங்' என்பது ஒரு மாமியார்-மருமகள் பிரச்சனை போன்றது.

ஒரு பெண் மருமகளாக உள்ளபோது மாமியாரின் நடவடிக்கைகளை எதிர்ப்பார்.

அந்தப் பெண் தனது மகனின் மனைவிக்கு மாமியாரான பின் மருமகளின் நடவடிக்கைகளை வெறுப்பார். இதே போன்றதுதான் ராக்கிங்கும்.

புதிய மாணவராக இருக்கும்போது 'ராக்கிங்'கை எதிர்க்கும் மாணவர்கள், தாம் பழைய மாணவரான பின் ராக்கிங்கை எதிர்ப்பதில்லை.

இன்று யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் 'ராக்கிங்' செய்ய வேண்டாம் என்று மாணவர்களைக் கோரியுள்ளனர்.

இவர்கள் தாம் முன்னர் பல்கலைக்கழகங்களில் பழைய மாணவர்களாக இருந்த போது இந்த 'ராக்கிங்' முறையை எதிர்த்தார்களா என்றால் அது கேள்விக் குறியே.

அன்று பகிடிவதையாக இருந்தது இன்று சித்திரவதையாக மாறுவதை இவர்கள் எதிர்க்கிறார்கள் என்றால் அது நியாயமானது.

இதே சமயம் ராக்கிங்கை எதிர்க்கும் பழைய மாணவரும், விரும்பி வரவேற்கும் புதிய மாணவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவர்கள் வித்தியாசமானவர்கள்.

ஆம் பல்கலைக்கழகமே ஒரு வித்தியாசமான உலகம் தான்.

நாளைய நாட்டை நடத்தப் போகும், நிர்வகிக்கப் போகும், ஏன் புரட்சிகளையே வழி நடத்தப்போகும் அறிவுஜீவிகளை உருவாக்கும் உலகம் அது.

அந்த உலகில் மக்களின் வரிப்பணத்தை அரசு லட்சக்கணக்கில் செலவழித்து உருவாக்கும் அறிவு ஜீவிகள் எப்படியானவர்களாக வெளிவர வேண்டும்.

பணத்திமிர் பிடித்த, சாதி வெறிபிடித்த, தன்னலம் மிக்கவர்களாகவா? அல்ல; அல்லவே அல்ல.

ஏழைகளின் கஷ்டங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய, சமத்துவ உணர்வுடைய, தியாக மனப்பான்மை கொண்ட அறிஞர்களாகவே இவர்கள் வெளிவர வேண்டும்.

அப்படியானவர்களாக இவர்கள் வெளிவரும் பட்சத்தில் தான் மக்களின் பணத்தில் உருவான, மக்கள் சொத்தான இந்த அறிவுஜீவிகள் மக்களுக்குப் பயன்படுவர்.

இப்படியானவர்களை உருவாக்கத்தான் 'ராக்கிங்' உருவானது.

உதாரணமாக; உயர் குலத்தில் பிறந்து, செல்வச் செழிப்பில் வளர்ந்து, காரிலே வளாகம் வந்து படித்துவிட்டு காரிலே தன்பாட்டில் வீடு திரும்பும் ஓர் மாணவன் ஓர் அறிவாளியாக மட்டும் உருவாகுவானே தவிர நாட்டு மக்களுக்கு பயன்படும் தலைவனாக உருவாக மாட்டான்.

ஊழியனாக இருக்கத் தெரிந்தவனே தலைவனாக இருக்கத் தகுதியுடையவன் என்பது 'பைபிள்' வாக்கு.

கத்தி கையை வெட்டும் என்பதற்காக அதை தூர எறிந்து விடுவதா?

ராக்கிங்கை ஒரு சில மாணவர்கள் தமது சொந்த சுயநல இச்சைகளுக்கு ஒரு வடிகாலாக பயன்படுத்துகிறார்கள் என்பதற்காக அதை வெறுப்பதா?

பட்டதாரிகளாக உயர் பதவிகளில் உள்ள பல குடும்பத்தினர் தமது வாழ்க்கைத் துணைகளாகத் தம்மால் கடுமையாக 'ராக்கிங்' செய்யப்பட்டவரையே கொண்டுள்ளதை நாம் காணமுடிகிறது.

இதிலிருந்து ராக்கிங் என்பது புரிந்துணர்விற்கு எவ்வளவு தூரம் ஓர் சிறந்த சாதனம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

வாழுவாள் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்பதுபோல் நாளை அதிகாரம் கிடைத்தால் அதை எப்படி பாவிப்பார்கள் என்பதை ராக்கிங் உணர்த்தட்டும்.

பகிடிவதை சித்திரவதையாகும்போது அதற்குரிய தீர்வை மாணவர்களே எடுக்கட்டும்.

அடுத்தவர் தலையீடு அவசியமற்றது.

அப்போதுதான் நாளைய நாட்டின் தலைவர்கள் தம் முன் தோன்றும் பிரச்சனைகளுக்கு தாமே தீர்வுகளை மேற்கொள்ள முடியும்.

---

● யாழ். போதனா வைத்தியசாலையில் காணப்படும் சில குறைபாடுகள் தொடர்பாக எமக்கு பல கடிதங்கள் வந்திருந்தன. இது தொடர்பாக நேரடியாக நாம் ஆராய முற்பட்டதன் விளைவே இக்கட்டுரை இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில விடயங்களையிட்டு வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ள பதில் இதே பகுதியில் வெளியிடப்படும்.

# நான்கு சக்கர 'ஸ்ரெச்சர்'

# மூன்று சில்லில் ஓடுகிறது...!

## நேரடி 'றிப்போட்'

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் வேதனையான சம்பவங்கள் உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா......? குறைகளைச் சுட்டிக்காட்டி சிறப்பான சேவையை வழங்க உதவமாட்டீர்களா......? நோயாளிகள் படும் அவல நிலையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வாருங்களேன்......

எமது அலுவலகத்திற்கு வந்த பல கடிதங்களில் எழுதப்பட்டிருக்கும் சில வரிகள் இவை. இக்கடிதங்கள் எம் கவனத்தை போதனா வைத்தியசாலைப்பக்கம் திருப்பியதில் வியப்பொன்றுமில்லை.

யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள குறைகள், அங்கு நடைபெறும் சம்பவங்கள், ஏமாற்று வேலைகள் இப்படிப் பலவகைப்பட்ட பிரச்சனைகளை ஓரிரு நாட்கள் அவதானித்து விட்டு கட்டுரை எழுதிவிட முடியாது. கட்டுரை எழுதிவிட்டால் மட்டும் பிரச்சனைகள் தீர்ந்துவிட மாட்டாது. அவற்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வருவதோடு அவர்கள் நடவடிக்கைகள் எடுக்கின்றார்களா? என்பதையும் அவதானித்து எழுத வேண்டியதும் நமது கடமையே.

### எமது அவா

நாம் தனிப்பட்ட எவர் மீதும் குற்றம் சாட்ட முயலவில்லை. எவரையும் பழிவாங்கும் நோக்கமும் எமக்கில்லை. குறைகளை சுட்டிக்காட்டி மக்களுக்கு சிறப்பான சேவை கிடைக்க வேண்டும் என்பதே எமது அவாவாகும். 'உண்மைகள் என்றும் ஊமை ஆவதில்லை ஆனால் சற்று ஓய்வு எடுக்கும்'......

பொது மக்கள் சிலர் தந்த நேரடித்தகவல்களையும் எமக்கு வந்த கடிதங்களையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு கடந்த ஒரு மாதகாலமாக யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று நிலைமைகளை அவதானித்ததோடு நாம் கண்ட கேட்ட எமக்கு வந்த கடிதங்களில் கூறப்பட்ட குறைகள் அனைத்தையும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றோம்.

### கியூவரிசை

வெளிநோயாளர் பிரிவில் நோயாளிகள் தமது நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு முதலில் நோயாளர் பரிசோதிக்கும் பிரிவில் ரிக்கெட் பெற்றுக் கொள்ள வேண்டும். ரிக்கெட் காலை எட்டு மணிக்கே வழங்கப்படுகிறது. இதனால் அதிகாலை ஆறு மணியில் இருந்து ரிக்கெட் பெறுவதற்காக நோயாளர்கள் கியூவரிசையில் வேதனையுடன் காத்து நிற்கின்றனர். இக் கியூவரிசை சில நாட்களில் வைத்தியசாலை வளவை விட்டு வெளியே வீதிக்கும் சென்று விடுவதும் உண்டு. இப்படியான நேரங்களில் வீதிகளால் செல்லும் பாதசாரிகளுக்கு இடையூறுகளும் ஏற்படுகின்றன.

கியூவரிசையில் நோயாளரைக் கூட்டிவருபவர் காத்து நிற்க-நோயாளர்-பார்வையாளர் பிரிவு இருக்கையில் இடத்தைப் பிடித்துக் கொள்கின்றார். உதவியின்றி தனித்து வந்து அதிகாலையில் கியூவரிசையில் நின்று ரிக்கெட் பெற்று பின் டாக்டரிடம் நோய்க்கு சிகிச்சை பெறச் செல்பவர்கள் நோயாளர் பிரிவு இருக்கையில் பின்வரிசையில் இருந்தே டாக்டரிடம் செல்லவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

நோயின் வேதனை தாங்க முடியாமல் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் கியூவரிசையில் காத்துநின்று ரிக்கெட் பெற்று இருக்கையில் இடம் பிடித்து அதற்குப்பின் டாக்டரிடம் சிகிச்சை பெறுகின்றனர். இதனால் நோயாளரின் நோய் மேலும் அதிகரிக்கின்றது.

### வேதனையின் விளிம்பில்

கியூவரிசையில் நின்ற வாகித் என்பவரைச் சந்தித்தபோது நான் காலை ஆறுமணியில் இருந்தே கியூவில் நிற்கின்றேன். எனக்கு தலை சுற்றுகிறது. இன்னும் அரை மணி நேரம் நின்றால் மயங்கி விழுந்து விடுவேன் போலிருக்கிறது என வேதனையுடன் கூறினார்.

வேலணையைச் சேர்ந்த சசிகலா கூறுகையில் நான் பஸ்சில் நின்று தான் வந்தேன். இப்போது கியூவரிசையிலும் நின்று கொண்டிருக்கின்றேன். நோயின் வேதனையும் தாங்க முடியவில்லை. கால் வலியையும் தாங்க முடியவில்லை என்று கூறியபோது அவர் கண்களில் இருந்து அவரை அறியாமலே கண்ணீர் வந்துவிட்டது.

**உதரன்**

நோயாளர்கள் வேதனையுடன் கியூவரிசையில் காத்து நிற்க வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்கள் தமக்குத் தெரிந்தவர்களுக்கு ரிக்கெட் பெற்றுக்கொடுத்து நோயாளர் பிரிவின் முன் ஆசனத்தில் அமர்த்துவதை நாம் நேரடியாகவே கண்டோம்.

### வீரமுழக்கம்

நோயாளர் பிரிவில் ரிக்கெட் கொடுக்கும் கடமையில் ஈடுபடும் ஊழியர்கள் எங்களை இனம் கண்டுகொண்டதும்... ஒருவருக்கு ஒரு ரிக்கெட் தான்...... கியூவில் வந்தால் தான் ரிக்கெட் தருவோம். உங்கள் ஏமாற்று வேலை எங்களுக்குத் தெரியும்...... கியூவில் வாருங்கள்... என்று கூறி கடமையை சரியாகச்செய்கின்றோம் என்பதை உணர்த்தினார்கள்.

நோயாளர்கள் மணிக்கணக்கில் கியூவரிசையில் காத்து நிற்க தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி முன் ஆசனத்தில் இடம் கிடைக்க...... கியூவரிசையில் நிற்பவர்கள் வேதனை மேல் வேதனைகளை அனுபவிக்கத்தான் வேண்டுமா......? இதற்கு மாற்றுவழி கிடையாதா......? எமக்குவந்த கடிதங்களில் கூறப்பட்டவை உண்மை என நிரூபிக்கும் சந்தர்ப்பங்களை எம்மால் நேரடியாகவே காணமுடிந்தது.

### பலவிதம்

இது இப்படிஇருக்க நோயாளர்களுடன் சில டாக்டர்கள் சீறிப் பாய்கின்றார்களாம். இது உண்மையா என அறிய முற்பட்டபோது...... இந்த ஐயாவா மிகவும் பொல்லாதவர்...... மரியாதையாகக் கூட கதைக்க மாட்டார்...... இப்படி சில நோயாளர்கள் கூறினர். அங்கு வேலைசெய்யும் ஊழியர் ஒருவரைக் கேட்டபோது உண்மை தான் என்றார் இப்படியான சீறிப்பாயும் டாக்டர்கள் நோயாளிகளின் நோயை மேலும் அதிகப்படுத்திவிடுகின்றார்கள் என்று ஒரு நடுத்தர வயது மாது அமைதியாகத் தெரிவித்தார்.

இதே போதனா வைத்தியசாலையில் அன்பாக நோயாளர்களுடன் பழகும் பல டாக்டர்களையும் நாம் கண்டோம் இந்த டாக்டர்களுடன் கதைத்தாலே நோய் குணமாகிவிடும்என்று நோயாளர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் டாக்டர்களும் இங்கு இருக்கின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

### முன்னுரிமை

இதேவேளை இன்னொரு உண்மையையும் நாம் குறிப்பிட வேண்டும். தனியார் வைத்தியசாலைக்குச்சென்று நோயாளர்களைப்பார்வையிடும் அரசாங்க வைத்தியர்கள் சிலர் போதனா வைத்தியசாலையில் காத்திருக்கும் நோயாளர்களைவிட இந்த நோயாளர்களைவைத்தியசாலையில் பார்வையிடுவதில் முன்னுரிமை கொடுக்கின்றனராம்.

வெளி நோயாளர் பிரிவில் உள்ள தள்ளுவண்டில்களை நாம் பார்த்தோம் ஒரு வண்டில் மூன்று சில்லுடன் மட்டும் ஓடிக்கொண்டிருக்க ஒரு சில்லு கழன்று போகின்ற நிலையில் இழுபட்டுக்கொண்டிருந்தது. இன்னொரு வண்டில் இரண்டு சில்லில் ஓட மற்றைய இரண்டு சில்லுகளும் கூடவே இழுபட்டுக்கொண்டிருந்தன. இதனை யாரும் கவனித்ததாகத்தெரியவில்லை....... இதைத்திருத்தக் கூட கொழும்பில் இருந்து தான் ஆட்கள் வரவேண்டுமோ?...

### காணவில்லை

வெளிநோயாளர் பிரிவிற்கு நோயாளர்கள் வரும்போது அவர்களை வண்டில்களில் ஏற்றிக்கொண்டு சென்று டாக்டர்களிடம் காண்பித்து வாட்டில் அனுமதிப்பதற்கு மாலை நேரங்களில் வண்டில்களைச் செலுத்துகின்ற சிற்றூழியர்கள் சிலரைக் காணமுடிவதில்லை. நோயாளரைக் கூட்டி வருபவரே வண்டிலை எடுத்து ஏற்றி டாக்டரிடம் கொண்டுசெல்வதைக் கண்டோம்.

அவசர சிகிச்சைக்காக நோயாளர்களை வெளிநோயாளர் பிரிவுக்குக் கொண்டுவரும்போது டாக்டர்களிடம் காண்பித்து ரிக்கெற் பெற்றபின் பதிவுப் புத்தகத்தில் பதிந்து வாட்டிற்குக் கொண்டுசென்று பின் தியேட்டருக்குக் கொண்டு செல்லும் முறை கடைப்பிடிப்பதாகவும் இந்நேர தாமதத்தால் பல உயிர் இழப்புக்கள் கடந்த காலங்களில் நிகழ்ந்த

6-ம் பக்கம் பார்க்க

புளியங்குளம் - ஆறுமுகநாவலர்பண்ணையில் வீற்றிருக்கும்

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள்

# மகா கும்பாபிஷேக சிறப்புமலர்


## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

சைவ அருட்பெருந்தகையீர்

புளியங்குளம் ஆறுமுகநாவலர் பண்ணை-அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். பராசக்தியான அம்பாளுக்கு எடுக்கும் விழாக்கள், கைங்கரியங்களெல்லாம், அதி உயர்ஸ்தானம் வகிப்பன என்பதில் சந்தேகமே இல்லை. சக்தி இன்றிச் சிவம் இல்லை. சிவபரம்பொருளுக்கு ஒரு ராத்திரி, ஆனால் அம்பாளுக்கு ஒன்பது ராத்திரிகள், விழா, விரத வழிபாடுகளாற்றுகிறோம். தாயன்புக்கிணை ஏது. எல்லாப் பிழைகளையும் பொறுத்து அருள் பாலிப்பவள் அன்னையே. ஒருமையுடன் அவள் பொன்னார் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால் பற்றறுத்துப் பரநிலை எய்துவது திண்ணம். இவ்விழாவுக்கு நனி பொருத்தமாக அருட்கவி திரு. சி. விநாசித்தம்பிப் புலவர் யாத்தளித்துள்ள திருப்பதிக நூலையும் கண்ணுற்றோம். அவருக்கே உரிய தனிப்பாணியில், பக்திரசம், பொருளழகு, சொல்லழகு, நடையழகு, சந்தவளவமைதி ஆதியன பொதிந்து மிளிர இந்நூலினையாத்திருப்பது பாராட்டுக்குரியது. படிக்குந் தோறும் நனியினிய இன்பத்தை நல்குகின்றன. சைவ மக்கள் எல்லோரும் பாராயணம் செய்து நற்பயன் பெற்றுய்யலாம். இக்குடமுழுக்கு எனும் பெருவிழா பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை எடுக்கப்படுவதால் அடியார்க்கு அரிய திருக்காட்சியாகும். இதில் பங்கு கொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்பிரவாகம் வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்



பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சகர்
உயிரவி உண்ணும் உயர் கண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வாரகி என்றே
செயிரவி நான்மறை சேர் திருநாமங்கள் செப்புவரே

— அபிராமி அந்தாதி

## துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவரின் வாழ்த்துச்செய்தி

சிவ புண்ணியங்களை மதித்துப் பெரும் பணியாற்றுபவர் நொச்சிகாமம் திரு. மு. பொன்னுத்துரை அவர்கள். ஞான நூல்களை வெளியீடுதல், அன்னதானம், ஆலயப் பணி ஆகியவற்றை முன்னின்று நடத்தும் சிறப்பு இவருக்கு உண்டு. புளியங்குளத்தில் ஆறுமுகநாவலர் பண்ணையில் இன்று வதிந்துகொண்டு தெய்வீகப் பணியாற்றி வருகின்றார். இதனாலே அங்கு ஸ்ரீ வீரமாகாளியம்பாளை எழுந்தருளப் பண்ணுவதற்காக கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது. சைவசமயப் பண்பாட்டை அறிந்து ஒழுகுவதற்கு புளியங்குள மக்களுக்கு இக்கோயில் ஒரு வழிகாட்டித் தலமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலய கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேறவும் அன்றைய தினம் வெளியிடப்படவிருக்கும் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவரால் பாடப்பட்ட "ஸ்ரீ வீரமாகாளியம்மை திருப்பதிகம்" என்னும் நூலைப் பெற்று மக்கள் பயனடையவும் எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி


## மில்க்வைற் தொழில் அதிபரின் வாழ்த்துச் செய்தி

முயற்சி திருவினையாக்கும் எனும் குறிக்கோளுக்கிணங்க திருவாளர் மு. பொன்னுத்துரை அவர்கள் தமது வாழ்நாளை வீணாக்காது பல திறப்பட்ட பொதுஜனப் பணிகளைச் செய்துவருகிறார். சமய வளர்ச்சிக்காக கோவிற் திருப்பணிகள் பல செய்தும், புளியங்குளம் காளி அம்மன் கோவிலை ஸ்தாபித்துக் கும்பாபிஷேகமும் நிறைவேற்றியவர். இன்னும் அகதிகள் புனர்வாழ்வுப் பணியில் பெரிதும் பங்கெடுத்து உதவி புரிந்தவர். கைத்தொழில் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர். சிறப்பாக புளியங்குளத்தில் ஆறுமுகநாவலர் கமம் என ஆரம்பித்து பல விவசாயத்துறை வளர்ச்சிக்கு கர்த்தாவாக விளங்குகிறார். இன்னும் இவர் நொச்சியாகமத்தில் அரிசி ஆலை அமைத்து விவசாயிகளின் உற்பத்திக்கு நல்ல விலை கொடுத்து அரிசி ஆலையை நடத்தினார். இன்னும் இவர் தொடர்ந்து நல்ல பணிகளைச் செய்து வருவது எமது மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும். அவர் பணிகள் தொடரவும், கும்பாபிஷேகம் குறைவற நிறைவேறவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

கும்பாபிஷேகம் இனிது நிறைவேற பிரார்த்திக்கிறோம்

பாலா அச்சகம்

காரைநகர்



## ஆறுமுகநாவலர்பண்ணை உரிமையாளரும் ஆலய பரிபாலகருமான நொச்சிகாமம் மு. பொன்னுத்துரை அவர்களின் நல்லுரை

நாட்டின் இன்றைய சூழ்நிலையில் மக்களின் மனதில் அமைதியையும் ஆனந்தத்தையும் ஏற்படுத்தவும், மக்களிடையே பக்தி உணர்வையும் இளைஞர்களிடையே கோயில் பழக்கத்தை ஏற்படுத்தவும், நாட்டில் மழைபெய்து வயல் நிலங்களில் தானியங்கள் நன்றாக விளையவும், அரன் நாமமே சூழ்ந்து வையகமும் துயர் தீரவும் எண்ணியே இக்கோயிலை மிகவும் சுருக்கமாக சிறந்ததாக அமைத்து கும்பாபிஷேகம் செய்கின்றேன். நொச்சியாகமத்தில் ஐயனார் கோவிலை அமைத்தும், காரைநகர் மணற்காட்டு அம்மன் கோயிலுக்கு அருகில் பார்வதி மடத்தை அமைத்தும், அருகில் அன்னதான மடம் கட்டுவதற்கு நிலத்தை உகந்தளித்தும் மக்களின் பாவனைக்கு உதவி, அதன் மூலம் மக்கள் பயன்பெறுவது போன்று இக் கோயிலையும் மக்கள் அணுகி வணங்கி அதன் மூலம் மன அமைதியும் சாந்தியும் பெறவேண்டியது அவர்களது கடமை அதையே யானும் வேண்டி நிற்கின்றேன். கும்பாபிஷேகம் நடைபெறும் இத்தினத்தில் இக் கோயில் அமைவதற்கும், அம்பிகையை யாழ்ப்பாணத்தில் செய்வித்து கொண்டு வந்து தந்தவரும், எனது ஆருயிர் நண்பருமான அன்பன் வித்துவான் மு. சபாரத்தினம் அவர்களை நினைவு கூருவதுடன், இவ்வாலயத்தை சிறப்புற அமைத்த சிற்பாசாரியருக்கும், கிரியைகளை நிறைவேற்றிய அந்தணப் பெருமக்களுக்கும், கவிதைகளை ஆக்கியுதவிய அருட்புலவர் சீ. விநாசித்தம்பி அவர்களுக்கும், மலருக்கு வேண்டிய ஆசிச்செய்திகளை வழங்கிய அறிஞர்களுக்கும், கோயிலை தரிசித்து பயன்பெறும் அடியார்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

மு. பொன்னுத்துரை

# பிச்சைக்காரர் தொல்லையை நாட்டில் ஒழிக்க நடவடிக்கை

நாட்டில் பிச்சைக்காரர்களின் தொல்லையை குறைக்க சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது இதன்படி இவர்களின் விபரங்கள், இவர்கள் பிச்சை எடுப்பதில் ஈடுபடக்காரணம் என்பனவற்றை ஆராய அரசு தீர்மானித்துள்ளது.

இவர்களின் விருப்பத்தின் பேரில் பயிற்சிகள் அளிக்கப்படும் எனவும் உண்மையாக பிச்சை எடுப்பவர்கள் யார் என்ற விபரம் சேகரிக்கப்படும் எனவும் சமூகசேவை ராஜாங்க அமைச்சர் திருமதி சமந்தா கருணரத்தின தெரிவித்துள்ளார்.

இதனை முதலில் கொழும்பு மாநகரப்பகுதியில் நடைமுறைப்படுத்தி பின்னர் நாடு பூராவும் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசின் திட்டம் வெற்றியளித்தால் நாட்டில் பிச்சைக்காரர் தொல்லையை முற்றாக குறைக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இ.போ.ச. பஸ்களை திருத்த இந்திய தொழில் நிபுணர்கள்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்க சென்னையிலிருந்து நிபுணர்களை வரவழைக்க போக்குவரத்து இணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இந்திய அரசின் உதவியைக் கேட்டபோது அதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒன்பதினாயிரம் பஸ்வண்டிகள் உள்ளன. அவற்றைக்கொண்டு பயணிகள் போக்குவரத்துச் சேவையை திறம்பட செயற்படுத்தமுடியுமானால் இலங்கையில் உள்ள ஆறாயிரம் பஸ்களை ஏன் சிறந்த சேவையாற்ற விடமுடியாது என தெரிவித்த அமைச்சர் செல்லச்சாமி மேலும் இரண்டாயிரம் பஸ்களை கொள்வனவு செய்யவென நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அமைச்சரவையிடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

# மது ஒழிப்பு பிரசார கருத்தரங்கும் கலை நிகழ்ச்சியும்

(சித்தன்கேணி)

காலம் காலமாக மதுவை ஒழியுங்கள் என்று எத்தனையோ மகாநாடுகள், கருத்தரங்குகள் எல்லாம் கூடி வற்புறுத்திச் சொன்னாலும் மக்கள் அவற்றைக் கருத்திற் கொள்ளாது மதுவை அருந்தி தமது வாழ்க்கையை அழித்துக் கொள்வதையே காணக்கூடியதாகவுள்ளது.

வட பிரதேச நல்லொழுக்க இயக்க சம்மேளன ஆதரவில் அராலி வடக்கு மடத்தடி திருமகள் நல்லொழுக்க சங்கம் நடாத்திய மது ஒழிப்புப் பிரசாரக் கருத்தரங்கிலும் கலை நிகழ்ச்சிகளிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய வடபிரதேச நல்லொழுக்க இயக்க சம்மேளனத் தலைவர் திரு. ஆ. துரைமணி மேற்கண்டவாறு கூறினார்.

அராலி வடக்கு மடத்தடி திருமகள் சனசமூக நிலையத் தலைவர் திரு. இ தங்கராசா தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

டாக்டர் செ. பரமசிவம் பிள்ளை, டாக்டர் கே. சுகுமார் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் மது ஒழிப்பு பற்றி உரை நிகழ்த்தினர்.

திரு. ச. அம்பிகா நிதியின் "யமனும் மதுவும்" என்னும் வில்லிசை நிகழ்ச்சியும் திருமகள் நாடகமன்றத்தின் "திருந்திய உள்ளம்" என்னும் நாடகமும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இவ் விழாவில் இடம் பெற்றன.

# ஜப்பானிலிருந்து கார் இறக்குமதி பெரும் மோசடி அம்பலம்

ஜப்பானிலிருந்து புதிய கார்களை இறக்குமதி செய்வதில் பெரும் மோசடி நிகழ்ந்துள்ளமை விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

இந்த மோசடி மூலம் கோடிக் கணக்கான அந்நியச் செலவாணியைப் பயன்படுத்தி ஜப்பானிலிருந்து கடந்த சில வருடங்களாக புதிய கார்கள் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து கார்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான அனுமதிப் பத்திரங்களை இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் திணைக்களத்திலிருந்து திருடி போலி கையெழுத்திட்டு இவ்வாறு பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான ஆடம்பரக் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

# யாழ். உதவி அரச அதிபருக்கு பாராட்டு உபசார வைபவம்

(ஈச்சமோட்டை)

ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் தமது கடமைகளை சீராகவும், ஒழுங்காகவும் செயற்படுத்த முன்வரவேண்டும். அப்படி முன் வருபவர்களுக்கு எங்கும்-எப்பொழுதும் மதிப்பும் உயர்வும் கிடைப்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறு, யாழ். உதவி அரசாங்க அதிபராக இருந்து யாழ். பிரதித் திட்டமிடல் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற திரு. கே. மாணிக்கவாசகருக்கு அளித்த பாராட்டு வைபவத்தில் சிறப்புரை நிகழ்த்திய யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்,

கலைச்சுடர் சனசமூக நிலையமும், கொய்யாத்தோட்ட சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய இவ் வைபவம், கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தில் திரு. கோ. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. மாணிக்கவாசகர் தமது பதிலுரையில் எனது சிறுவயது முதல் என்னிடமிருந்து வந்த நோக்கங்கள், கருத்துக்கள், எனது கடமையைச் சிறப்பாகச் செய்வதற்கு துணைபோயுள்ளன. பெரியோர் சிறியோர் எனப்பாராது எம்மால் இயன்ற உதவிகளை செய்யவேண்டும் என்ற எண்ணம்தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தியுள்ளது என்றார். திரு. அ. ம. ரவீந்திரனின் நன்றியுரையுடன் வைபவம் நிறைவுபெற்றது.

# பாண் தயாரிக்க மாதரமில்லையாம்

(பண்டத்தரிப்பு)

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்த கோதுமை மா பாண் தயாரிப்பதற்கு ஏற்றதாகஇல்லைஎனபேக்கரிக்காரர்கள் புகார் தெரிவித்தனர்.

பாண் பொங்கி திடீரென இறங்குவதால் பாண் வேகாமலும் பொலிவின்றியும் வருகின்றது. அத்துடன் பாண் பொன்நிறமாகவும் விரைவில் மாறிவிடுகின்றது. இதனால் மக்கள் பாண் வாங்குவதில் பின்நிற்பதாகத் தெரியவருகின்றது.

# கந்தசாமி நினைவு தினம்

கடந்த வருடம் காணமல் போன சட்டத்தரணி திரு. எம் கந்தசாமியின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி கூட்டம் சற்றர்டே றிவியூ பணிமனையில் நடைபெற்றது.

கந்தசாமி 1977 இனக்கலவரத்துக்குப் பின்னர் தமிழ் மக்கள் மீதான வன் முறைகள் பற்றி சன்சோனிக் கமிஷன் முன்பு விரிவாக எடுத்துக் கூறியவர் என்றும் ஐரோப்பிய நாடுகளில் நிதி திரட்டி தமிழ் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார் என்றும் இங்கு பலரும் அவரது சேவைகளை பாராட்டி பேசினார்கள்.

# கந்தபுராண விரிவுரை பூர்த்தி

யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேகத்தை முன்னிட்டு தினமும் நல்லைக் குருமணியின் பிரதம சீடன் பிரம்ம ஸ்ரீ சிவ வை. நித்தியானந்த சர்மாவினால் பக்கவாத்திய சகிதம் நடாத்தி வந்த கந்த புராண தொடர் விரிவுரை ஸ்ரீ வள்ளி திருமணத்துடன் பூர்த்தியடைந்தது.

# பெண்ணுக்கு 500 ரூபா அபராதம்

பம்பலப்பிட்டியில் உள்ள பெண்மணி ஒருவர் வீதியில் குப்பைகள் போட்டார் என்ற குற்றத்திற்காக மாளிகாகந்த நீதிவான் ஐந்நுறுரூபா அபராதம் விதித்துள்ளார் கொழும்பு மாநகர சுகாதாரப்பகுதியினர் இப்பெண்மணி மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

# அதிபராக பதவி உயர்வு

(வேலணை)

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் உதவி அதிபராக கடமையாற்றி வந்த திரு. பொ. கேதாரநாதன் தற்பொழுது இப்பாடசாலையின் அதிபராக பதவி உயர்த்தப்பட்டு புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# முஸ்லிம் ஆசிரியர் நியமனம்

(காவலூர்)

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் கல்வி பயிலும் முஸ்லிம் மாணவர்களுக்கு முஸ்லிம் சமயம் கற்பிப்பதற்கு முஸ்லிம் ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்ததற்கு வேலணை கோட்டக்கல்வி அதிபர் திரு. சி. புலேந்திரனுக்கு மேற்படி பாடசாலை அபிவிருத்திச்சபையினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

# ஆலய திருவிழா

(பருத்தித்துறை)

புலோலி மத்தி அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 17-ம் திகதி ஆரம்பமாகி 10 தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது. பத்துத்தினங்களும் காலை விசேட அபிடேகங்களும், மாலை எம்பெருமான் வீதி வலம் வரும் திருவிழாவும் நடைபெற்று எதிர்வரும் 26-ம் திகதி நடைபெறும் திருவிழாவுடன் இவ் உற்சவங்கள் முடிவடையும்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# ஆசிரியர் நியமனம் பற்றி பிரதிக்கல்வி பணிப்பாளர் பதில்

எனது இல: ஜே/ஜீ/
கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1989. 06. 22 ஆந் தேதி.

ஆசிரியர்,
முரசொலி,
யாழ்ப்பாணம்.

தங்களின் இன்றைய (1989. 06. 22) செய்தித்தாளில் காணப்படும் மேற்படி விடயம் பற்றிய, நவாலியைச் சேர்ந்த மார்க்கண்டு சுதா என்பவரின் கடிதம் சம்பந்தமாக இக்கடிதம் எழுதப்படுகிறது.

02. வசதிகள் சேவைகள், கட்டண ஆசிரியர்களினதும், பாடசாலை அபிவிருத்திச்சங்க ஆசிரியர்களினதும், நியமனங்களும், நியமனப் புதுப்பித்தல்களும், கல்வி அமைச்சின் சுற்றறிவிப்பு அறிவுறுத்துரைகளுக்கமையவே செய்யப்படுகின்றன. ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்குரிய அதிகாரம் மத்திய கல்வி அமைச்சிடமும் மாகாண கல்வியமைச்சிடமுமேயுள்ளன. ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்குரிய மிகக் குறைந்த, மற்றும் மிகக் கூடிய வயதெல்லைகளைச் சம்பந்தப்பட்ட கல்வி அமைச்சே தீர்மானிக்கின்றது

03. மத்திய கல்வி அமைச்சின் பணிப்பிற்கிணங்கவே ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஒய்வு பெற்ற ஆசிரியரிடமிருந்தும் அரசஉத்தியோகத்தர்களிடமிருந்தும் இத்திணைக்களத்தால் கோரப்பட்டன. இந்நியமனங்கள் முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலேயே வழங்கப்படுமென்பதையும் இவை நிரந்தர நியமனங்களல்லவென்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

செல்வி தி. பெரியதம்பி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

---

# பூநகரி மகா வித்தியாலயத்தில் மதிய உணவு தரமில்லை

ஆசிரியர்,
முரசொலி.

ஐயா,

எமது பூநகரிப் பகுதியில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் முக்கியம் வாய்ந்ததும் தரத்தில் உயர்ந்ததும் பூநகரி மகா வித்தியாலயம் என்பதை பூநகரி மக்கள் பலரும் அறிவர். ஆனால் தற்போது அரசினரால் வழங்கப்பெறும் மதிய போசனத்தின் தரக்குறைவால் மாணவர்கள் உடல் நலம் குறைந்து நோய்வாய்ப்பட வேண்டிய நிலையிலுள்ளனர். அன்றியும் மதிய போசனம் வழங்கப் பெறுவதன் நோக்கம் வறிய பிள்ளைகட்கு போஷாக்குச் சத்துள்ள உணவை வழங்குவதேயாகும்.

அவ்வாறிருக்க ஐந்து நாட்களுக்கு முன்னர் நனையப் போட்ட பயறை காயவைத்து பின்னர் அவித்து மதிய போசனமாகப் பிள்ளைகட்கு வழங்கிய ஒரு நிகழ்ச்சி பெற்றோராகிய எம்மை முட்டாள்கள் எனக் கருதுவதற்கு ஓர் சான்றாகும்.

மேலும் பாடசாலை நேரத்தைக் கூட்டி மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்காகவே மதிய போசனம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயினும் தற்போதைய நிலையை நாம் உற்று நோக்கின் அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை. ஆகவே இவைகளைத் தாங்கள் பரிசீலனை செய்து குறித்த பாடசாலையில் நடைபெறும் குறைகளை நிவர்த்தி செய்து மாணவர்களின் குறைகளைப் போக்கும் வண்ணம் பெற்றோராகிய நாம் பணிவுடன் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
பெற்றோர்கள்.

பூநகரி

குறிப்பு:- இருபத்தைந்து பெற்றோர்கள் தங்கள் உண்மைக் கையொப்பம் இட்டு இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

---

# நயினாதீவு உற்சவத்தில் நகையை களவெடுத்து விழுங்கிய நபர்

(காவலூர்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய பூங்காவன திருவிழாவிற்கு மறுநாள் காலை உறக்கத்திலிருந்த பெண்மணியொருவரின் ஏழு பவுண் எடையுள்ள சங்கிலியை நாடோடிப் பெண் ஒருவர் அபகரித்து வாயினுள் போட்டு விழுங்கிவிட்டார்.

இதனை கண்ணுற்ற பெண்ணும், பக்தர்களும் அந்நாடோடிப் பெண்ணை பிடித்து பாதுகாப்பாக வைத்து அவளுக்கு பேதி மருந்து கொடுத்த போது சங்கிலிக் கொடி வெளி வந்தது.

இப் பெண்ணுக்கு உடந்தையாக இன்னுமொரு ஆணும் இருந்துள்ளார். பின்னர் இவர்கள் இருவரும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டனர்.

# முத்திரை அங்கே வாங்காவிடின் பதிவுத்தபால் ஏற்க மறுப்பு

யாழ். நகரிலுள்ள முகவர் தபால் நிலையமொன்று பதிவு தபாலைஏற்பதற்கு குறிப்பிட்ட நிபந்தனையொன்றை விதித்து வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பதிவு தபாலை அனுப்ப வருபவர் அதற்குரிய முத்திரையை அங்கு வாங்கினால் மட்டுமே அந்த பதிவுதபால் அங்கு ஏற்கப்படுமென வற்புறுத்தப்படுகின்றதாம்.

வேறு இடங்களில் முத்திரையை வாங்கி பதிவு செய்ய வருபவர்களின் தபாலை இந்த முகவர் நிலையத்தில் பணிபுரியும் சிலர் ஏற்க மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## விளையாட்டுச் செய்திகள்

கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கம்

# விளையாட்டுத்துறை அதிகாரிகள் சேவைநேரம் பற்றிய அட்டவணை

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு, மாவட்டங்கள், உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில், கடமைபுரியும், விளையாட்டுத்துறை அதிகாரிகளை எங்கெங்கு சந்தித்து அவர்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றினை அண்மையில் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அப்பட்டியலில் கீழ் குறிப்பிடப்படும் விளையாட்டு மைதானங்களில் - காலை 7.30 மணி தொடக்கம் 9 30 மணி வரையிலும், மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரை விளையாட்டுத்துறை அதிகாரிகளை சந்திக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கள் புதன் ஆகிய இரு தினங்களிலும் யாழ். பிரதான விளியாட்டரங்கிலும், வியாழன் அன்று கோப்பாய் பொது விளையாட்டு மைதானத்திலும், வெள்ளிக் கிழமைகளில் வேலுப்பிள்ளை விளையாட்டரங்கிலும், சனிக்கிழமைகளில் சங்கானை பொது விளையாட்டு மைதானத்திலும், விளையாட்டுத்துறை அதிகாரி திரு: கே. டபிள்யு. விமலராஜன் அவர்களைச் சந்திக்கலாம்.

திரு. ஏ. அண்ணாத்துரை விளையாட்டதிகாரியை, திங்கள், புதன் ஆகிய இரு தினங்களிலும் கோப்பாய் பொது விளையாட்டு மைதானத்திலும் வெள்ளி,சனி ஆகிய இருதினங்களிலும் புத்தூர் பொது விளையாட்டு மைதானத்திலும், செவ்வாய் வியாழன் ஆகிய நாட்களில் பண்டத்தரிப்பு பொது விளையாட்டரங்கிலும் சந்திக்கலாம்.

திருமதி கே. வைத்தியநாதன், விளையாட்டுத்துறை அதிகாரியை, திங்கள், புதன் கிழமைகளில் புத்தூர் நகர விளையாட்டரங்கிலும், செவ்வாய், வியாழன் நாட்களில் பண்டத்தரிப்பு பொது விளையாட்டரங்கிலும், வெள்ளி, சனிக்கிழமைகளில் அரியாலை பொது விளையாட்டரங்கிலும் சந்திக்கலாம்.

# மெய்வல்லுநர் போட்டிகள்

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தினால், கோட்டக்கல்வி அலுவலக மட்டத்தில் கொத்தணி பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த மெய்வல்லுநர்போட்டி கடந்த வாரம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. நாகராசா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் தெல்லிப்பழை கொத்தணி முதலாம் இடத்தையும், இரண்டாம் மூன்றும் இடங்களை முறையே, இளவாலை கொத்தணியும், பண்டத்தரிப்பு கொத்தணியும் பெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. கு. உதயகுமார் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்.

# புளுடைமன், ஜங்பேட்ஸ், றெட்சண் அணிகள் வெற்றி

அரியாலை றேடியன் கல்வி நிலையத்தினரால் கந்தையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காகநடத்தப்படும் 20 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்துகிரிக்கெட் போட்டியில்,கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலைவிளையாட்டுக்கழகமைதானத்தில் இடம் பெற்றஆட்டங்களில்,புளுடைமன் ஜங்பேட்ஸ்,றெட்சண் ஆகிய கழகங்கள் வெற்றி பெற்றுள்ளன.

ஸ்கோர்விபரம்-புளுடைமன் 18.2 ஓவர்களில் 44ஓட்டங்களைப்பெற்று ஆட்டம் இழந்தது.வளர்மதி விளையாட்டுக் கழக அணி 8.2 ஓவர்களில் தனது சகல இலக்குகளையும் இழந்து 13 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இப்போட்டித்தொடரில்இதுவரைநடந்த ஆட்டங்களில் ஒரு அணி பெற்ற ஆகக்குறைந்த ஓட்டங்கள் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

ஜங்பேட்ஸ் அணி 20ஓவர்களில் 8இலக்குகளை இழந்து119 ஓட்டங்களைக் குவித்தது.இப்போட்டித்தொடரில் ஒருஅணி பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டங்கள் இதுவாகும்.அதனை எதிர்த்து ஆடிய வின்டிஸ்அணி 19.2 ஓவர்களில் 96ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் இழந்தது.

ஸ்கைஸ்ரேஸ் அணிதனது துடுப்பாட்டத்தில் 19.5 ஓவர்களில் தனது இலக்குகள் யாவையும் இழந்து 53ஓட்டங்களைப்பெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய றெட்சண் அணி,வெற்றிஇலக்கான 54 ஓட்டங்களையும்6விக்கெட்களைமாத்திரம்இழந்துபெற்றது மத்தியஸ்தர்களாக,திரு சண்யோண்சண், திரு.ஆர். கிறிஸ்ரி,ஆர்.ரேய் ஆகியோர் கடமையாற்றினர்கள்.

## போட்டிகள் இன்றும் நாளையும்

புங்குடுதீவு விணையாட்டுச் சங்கம் தீவுப்பகுதி மாணவரிடையே 16-ம் திகதி நடாத்தவிருந்த உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட போட்டிகள் இன்றும் நாளையும் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மைதானத்திலும், புங்குடுதீவு மகா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

## ஒத்திவைப்பு

யாழ். மாவட்ட கரபந்தாட்ட சம்மேளனம் செற்அப் முறையில் நடாத்த இருந்த கரபந்தாட்டப் போட்டி சூழ்நிலை காரணமாக பின் போடப்பட்டுள்ளது.

## கடன் பெற 300பேர் விண்ணப்பம்

ஊழியர் சேமலாப நிதியிலிருந்து கடன் பெறுவதற்கு யாழ் மாவட்டத்தில் சுமார் முந்நூறு பேர் விண்ணப்பித்துள்ளனர்.

வீடு கட்டுதல், திருத்துதல், காணிவாங்குதல், குத்தகை மீளுதல் ஆகிய காரணங்களுக்காகவே இக்கடன் வழங்கப் படவுள்ளது.சேமலாப நிதியின் குறிப்பிட்ட வீதத்தை விண்ணப்பதாரி இத்திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

## எனது இராகங்கள் அறிமுக விழா

வவுனியா திலீபனின்'எனது இராகங்கள்' கவிதை நூலின் அறிமுகவிழா இன்று மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா நல்லூர் கலை இலக்கிய கலாசார கழகத் தலைவர் திரு. த. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறும். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் ஆசியுரையும் திரு. ஐ சண்முகலிங்கம் வரவேற்புரையும் வழங்குவார்கள்.மற்றும் பலர் அறிமுக உரை வழங்கவுள்ளனர்.

## மீன் விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

பாஷையூர்,குருநகர் மற்றும் குடா நாட்டின் பல பகுதிகளிலும் மீனின் விலை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. இதற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிந்த போது,கடந்த சில தினங்களாக பலமாக வீசும் தென்மேற் பருவக் காற்றினால் மீனவர்கள் கடலுக்கு செல்ல அஞ்சுவதே என தெரிவிக்கப் படுகிறது.

## யாழ். மாவட்டத்தில்

# அகதிகள் ஐ.நா. தூதரகம் 1500 வீடுகளை அமைக்கவுள்ளது

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட அகதிகளின் விடில்லாக் குறையைப் போக்கும் முகமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் உருவாக்கியுள்ள 1500 வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வீடமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்தி 1500 வீடுகளையும் அமைக்கும் வேலைகளை அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைத்துள்ளது. இவ்வீடமைப்பு மேற்பார்வை வேலைகளை மேற்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

இச்சேவையைச் செய்வதற்காக ஒரு வீட்டிற்கு 300/- ரூபா வீதம் 4,50,00 ரூபா வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குவழங்கப்படுகிறது

ஏற்கனவே இவ் வீடமைப்புத் திட்டத்தை விரைவு படுத்தும் நோக்கத்துடன் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்கு ஏழு மோட்டார் சைக்கிள்களை வழங்கியுள்ளது.

## நான்கு சக்கர...

(...3ஆம் பக்கத்தொடர்ச்சி)

தாகவும் எமக்கு வந்த கடிதங்களில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இதுபற்றி ஒரு டாக்டரிடம் கேட்டபோது ஆபத்தான நோயாளியாயின் உடனடியாக சத்திரசிகிச்சைக்காக தியேட்டருக்கு அனுப்பிவைக்கின்றோம். இத்தகவலில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினர்.

### கடமையில் இல்லை

வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் சிலரைக் கடமை நேரத்தில் காணமுடிவதில்லையாம்.இவர்கள்சில டாக்டர்களின் அல்லது அதிகாரிகள் வீடுகளுக்குச் சில பொருட்களை எடுத்துச்செல்லவும் வேறு சில பொருட்களை எடுத்து வரவும் சிலவேளைகளில் தமது சொந்த அலுவல்களைப் பார்ப்பதற்காகவும் கடமை நேரத்தில் வெளியே சென்று விடுவதாகக் கூறப்படுகின்றது. இதுபற்றி சிலரிடம் விசாரிதத போது இத்தகவலில் உண்மை இல்லாமலில்லை என்று சுருக்கமாகவே கூறினர்.

யாழ். போதனா வைத்தியசாலை வளவை சுற்றிப்பார்த்த போது, நாய்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது. சில சொறி நாய்கள் சில வாட்டுகளுக்குள்ளால் சென்று வருவதையும் காணமுடிந்தது. இந்த நாய்களால் நோயாளர்களுக்கு புதுவித நோய் வந்துவிடக்கூடிய நிலையும் தென்படுகின்றது.

(திங்கள் தொடரும்)

# மானிப்பாயில் 'கற்பகம்' விற்பனை நிலைய திறப்புவிழா

(நாயன்மார்கட்டு)

''மனிதகுலம் இயற்கைச் சுவாத்தியங்களுடன் வாழ்வதன் மூலமே சிறப்பானவர்களாகவும் சுகதேகிகளாகவும் வாழமுடியும்.ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் இறைவனால் இயற்கையான வளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தின் இயற்கை வளங்களில் மிக முக்கியமான வளம் பனை வளமாகும். இந்த வளத்தை எமது மூதாதையர் சிறப்பாகப் பயன்படுத்தி சுகமாகவும், திடமாகவும், செலவின்றியும் வாழ்ந்து வந்துள்ளதை நாம் அறியமுடிகிறது.

இவ்வாறு மானிப்பாயில் கற்பகம் விற்பனை நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றிய ஆத்மஜோதி நா. முத்தையா தெரிவித்தார். பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப் படுத்தல் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் இது பன்னிரண்டாவது விற்பனை நிலையமாகத் திறக்கப்பட்டது.

திரு. நா. முத்தையா தொடர்ந்து பேசுகையில் எமது நாட்டின் இயற்கை உணவுகளே எமது உடலுக்கு இயற்கையாகப் பொருத்தமானவையாகும். இறக்குமதி செய்யப்படும் உணவுகளைவிட எமது இயற்கை வளங்களே எமக்கு இன்றியமையாதவைகளாகும். எமது மூதாதையர் பாவித்துவந்த வைத்திய ஏடுகளில் ''தாலமூலதைலம்'' என்பது பிணிதீர்க்கும் ஒரு மருந்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது என்ன என்பதை ஒருவரும் புரிந்துகொள்ள முடியவில்லை. ''தாலம் என்றால் பனை மூலம் என்றால் கிழங்கு'' அந்தப் பனங்கிழங்கை இடித்து எடுத்த மாவின் கூழ் தைலம் இதைப் பாவிப்பவர்களுக்கு நோய் சேர்வது மிகவும் கடினம்.

தென் இந்தியாவில் காந்தி நிலையத்தில் உள்ள நடனக் கல்லூரி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அங்குள்ள நடன ஆசிரியர்கள் நடனக்கலைக்குப் பயன்படுத்தும் நகைகளை எமக்குக் காண்பித்தனர். பளபளக்கும் அந்த நகைகள் பனை ஓலையினால் செய்யப்பட்டவைகளாகும். எனவே நாம் இயற்கைக்கு மாறாக வாழ்ந்து துன்பங்களைச் சுமப்பதைவிட இறைவன் எமக்குத் தந்த இயற்கைகளோடு வாழ வேண்டும் என்றார்.

இச்சபையின் பணிப்பாளர்களில் ஒருவரும் தொழிலதிபருமான திரு. கே கனகராசா பேசுகையில் இயற்கையோடு இணைந்த வாழ்வே மனிதனுக்கு உறுதியையும் சிறப்பையும் கொடுக்கவல்லது. எமது பகுதியின் இயற்கை வளமான பனையின் மூலம் பெறக்கூடிய உணவுப் பொருட்களான பனங்கிழங்கு, பனம்பழம், பதநீர் என்பன பலவிதமான உணவுப் பொருட்களாக,குளிர் பானங்களாக சத்துணவுமாவகைகளாக உருமாறி விற்பனையாவது எமது தொழில்நுட்பத்திறனை வெளிப்படுத்துவதாக உள்ளன என்றார் சந்தைப்படுத்தும் பிரிவு உத்தியோகத்தர் திரு. கே. மன்மதராசா நன்றியுரையாற்றினார். வேறு பலரும் பேசினார்கள்.

## மடுமாதா திருவிழா

மடுமாதா ஜூலை மாத திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஜூலை முதலாம் திகதி தேவ நற்கருணை விழாவும், மறுநாள் 2ஆம் திகதி திருநாள்திருப்பலியும் இடம் பெறும்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க


பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம்

## தமிழ் ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கான விண்ணப்பம்

மேற்படி பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தில் தற்காலிக தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பூநகரியை வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்ப முடிவுததிகதி 30-06-89.

கல்வித் தகைமை: க. பொ. த. (சாதாரண) தரத்தில் தமிழ் பாஷையில் விசேட சித்தியும் 6 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும் அத்தோடு தமிழ் தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 15 சொற்களும் ஆங்கில தட்டெழுத்தில் நிமிடத்திற்கு 20 சொற்களும் தட்டச்சு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம்: 305/14 730/- உம் ஏனைய வாழ்க்கைச் செலவும். 730 — 20×10 — 25×5 — 1055/-

வயது: இருபதுக்கு மேல் நாற்பதுக்கு உட்பட

விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கல்விச் சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப்பத்திரம், நற்சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகளுடன் 30 06 89-ம் திகதிக்கு முன் செயலாளர், பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம், பூநகரி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இங்ஙனம்
பொ. தங்கராசா
உப தலைவர்
பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம்.

06252

● பெரு நாட்டில் நடந்த கோரமான விபத்து

# விமானம் வெடித்துச் சிதறியது

# பயணிகள் 60 பேரும் மரணம்!

(லீமா)

பெருநாட்டைச் சேர்ந்த ராணுவ விமானமொன்று மலைப் பகுதியில் வெடித்துச் சிதறியதில் விமானத்திலிருந்த அறுபது பயணிகளும் கொல்லப்பட்டார்கள். விமானத்தில் சிவிலியன்களே பெருமளவில் இருந்ததாக அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

லீமாவிலிருந்து நூற்றைம்பது மைல் வடக்கே உள்ள பெர்மா என்ற நகரத்தில் இவ்விமானம் புதன் கிழமை மாலை காணாமல் போய்விட்டதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக பெர்மா நகர பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில் இவ்விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களில் நாற்பத்திரண்டு பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

விமானம் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்தபோதே விபத்துக்குள்ளானதாகவும் வெளிநாட்டுப் பயணிகள் எவரும் விமானத்தில் இருக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விமானத்தில் ராணுவ அதிகாரிகள் சிலரும் இருந்ததாக வெளியான செய்திகளை அதிகாரிகள் உறுதிப்படுத்தவில்லை. விமான விபத்துக்கான காரணம் தெரியவில்லை. விசாரணை நடைபெறுகிறது.

# 'இன்சாட்-1டி' சேதமடைந்தது!

(புதுடில்லி)

இந்தியாவின் 'இன்சாட்-1டி' செயற்கைக் கோள் திட்டம் சேதமடைந்துள்ளபோதிலும் இத்திட்டம் தங்குதடையின்றி நிறைவேற்றப்படும் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

இதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்

அமெரிக்காவிலுள்ள கெனடி விண்தளத்தில் 'டெல்டா' செலுத்துவாகனத்துடன் இணைக்கமுற்பட்டபோது அது சேதமடைந்தது. இதன் சேதம் மதிப்பிடப்பட்டு மீள அனுப்புவதற்கான புதிய திகதி அறிவிக்கப்படும்.

● மேற்கு ஜேர்மன் பிரஜை கைது

## நெதர்லாந்தில் துப்பாக்கிசூடு இராணுவ அதிகாரி ஒருவர் பலி!

(அம்ஸ்ரடாம்)

நெதர்லாந்தில் துப்பாக்கி நபர் ஒருவருக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் இராணுவ அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். குறிப்பிட்ட அந்த நபரை கைது செய்ய முற்படும்போதே மோதல் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

மோதலின் போது இராணுவ அதிகாரியை துப்பாக்கி முனையில் பணயம் வைத்துக் கொண்டு பணயத் தொகையாக ஐம்பது லட்சம் டொலரும் ஹீரோயின் போதை வஸ்துவையும் அந்நபர் கேட்டார். தனது முயற்சி பலிக்காது போகவே இவர் வீதித் தடையையும் மீறி ஓடமுற்பட்டார். அப்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இவர் காயமடைந்து கைது செய்யப்பட்டார். விசாரணையில் இவர் மே. ஜேர்மனி சேர்ந்தவர் என தெரியவருகிறது.

## விவாகரத்தில் பிரிட்டன் முன்னணி

ஐரோப்பிய நாடுகளில் விவாகரத்து செய்பவர்களின் எண்ணிக்கை பிரிட்டன் நாட்டில்தான் அதிகம். ஆயிரம் தம்பதிகளில் பதின்மூன்று தம்பதிகள் இங்கு விவாகரத்து செய்து கொள்கிறார்கள். பிரிட்டனுக்கு அடுத்த படியாக டென்மார்க் இருக்கிறது இங்கு ஆயிரத்துக்கு பன்னிரண்டு பேர் விவாகரத்து செய்து கொள்கிறார்கள்.

## மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் சோவியத்யூனியனில் தேரிவு

சோவியத்யூனியனில் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய தேர்தல் சட்டத்தின்படி சோவியத்மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய காங்கிரஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தமக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் முற்றிலும் புதிய சூழலில் நடைபெற்றது இதில் கலந்து கொண்டபிரதிநிதிகள் யாவரும் சுதந்திரமாக விவாதித்தனர் சகல பிரதிநிகளுக்கும் தம் கருத்துகளை தெரிவிக்க சந்தர்ப்பம்கொடுக்கப்பட்டது

பெரஸ்த்ரோய்காவின் போக்கில் சோவியத்சமுதாயத்தில் இடம் பெற்றுள்ள மாற்றங்கள், அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் மக்களாட்சியை பலப்படுத்தும் கருத்துக்கள் பற்றி விவாதித்த இக்காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது'

● மாணவர் கிளர்ச்சி பற்றி ஒரு கண்ணோட்டம்

## சீனவை தன்பக்கம் ஈர்ப்பதற்கு ரஷ்யாவுக்கு கிடைத்த வாய்ப்பு

மாணவர் கிளர்ச்சி சீனவை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. கொம்மியூனிஸ்ட் நாடொன்று சந்தித்த மிகப்பெரிய சவால் இது எனலாம். சீனத் தலைவர்கள் சற்றுத் தயங்குவது போல் முதலில் தோன்றியது. ஆனல் ''மஞ்சட் புலி'' பதுங்குவது பாய்வதற்குத் தான் என்பது இப்பொழுது தெரிவாகி விட்டது. அப்பா, என்ன பாய்ச்சல் இது! கிளர்ச்சியில் ஈடுபட்ட எண்மருக்கு மரண தண்டனை-சுட்டுத்தள்ளப்பட்டார்கள்!

கருணை காட்டுமாறு உலக நாடுகள் விடுத்த வேண்டுகோளுக்கு பேஜிங் செவிசாய்க்கவேயில்லை! கிளர்ச்சிக்காரர்களை மட்டுமன்றி - இனிமேல் எதிர்ப்பியக்கத்தில் ஈடுபடக்கூடியவர்களையும் கலங்க அடித்து விட்டது இந்த நடவடிக்கை. ஆனலும் சீன அரசு மிக அவதானமாகவே நடந்து கொள்கிறதென்பதற்குச் சான்று:- இதுவரை மாணவர் எவரும்தூக்கிலிடப்படவில்லை.

சீன நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நாடு அமெரிக்கா, அமெரிக்காவின் அதிருப்தி நியாயமேயாயினும், இவ்வளவு தூரம் சீறிப்பாய வேண்டுமா என்பது கேள்வி.

இத்தனைக்கும் சீனவுக்கும், அமெரிக்காவுக்கும் ஒட்டுறவேற்பட்டுக் கொஞ்சக் காலந்தான் ஆகிறது. ரஷ்ய செல்வாக்கில் இருந்து சீனவை விடுவித்து, தன்பக்கம் சாயவைத்தது அமெரிக்க ராஜதந்திரத்தின் வெற்றி எனலாம். அமெரிக்கா - சீன - பாகிஸ்தான் ஓர் அணியிலும், ரஷ்யா இந்தியா மறு அணியிலுமாக நின்று மிண்டின.

இந்தச் சம்பவம் தளம்புவதற்கான அறிகுறி இப்போது தென்பட்டுள்ளது. சோவியத் ஒன்றியமோ 'மாணவர் கிளர்ச்சி சீனவின் உள்நாட்டுப் பிரச்சினை' என்று சொல்லிவிட்டது. அமெரிக்க ஜனதிபதி புஷ் சீன மீது பொருளாதாரத் தடைகளையும் கொண்டுவர முயல்கிறார்.

சித்தாந்தரீதியாக நோக்கினல், ஆர்ப்பாட்டம், எதிர்ப்பியக்கம் என்பதெல்லாம் ஜனநாயக வழிமுறைகள், பொதுவுடமை நாடுகளில் இவற்றுக்கு இடமில்லை சீன இம்முறை விட்டுக்கொடுக்குமானல் எதிர்காலத்தில் சீன மட்டுமன்றி ஏனைய கொம்மியூனிஸ்ட் நாடுகளும் சுதந்திர சிந்தனைக்கு மதிப்புக் கொடுக்க வேண்டி ஏற்படலாம். கொம்மியூனிஸ்ம் அடைந்துள்ள 'வெற்றி'களையும் கோட்டைவிடுவதாய் முடியும். இந்நிலை ஏற்படுவதை சோவியத் ஒன்றியமும் விரும்பாது. சீனவைத் தன்பக்கம் இழுக்க இது ரஷ்யாவுக்கு ஒரு வாய்ப்பு.

— சோ. ப.

## புதிய மாடி கட்டிடம்

(சங்கானை)

மாதகல் சென் ஜோசவ் மகா வித்தியாலயத்தில்மூன்று இலட்சம் ரூபா செலவில் இரு மாடிக்கட்டிடம் ஒன்று இவ்வருடம் அமைக்கப்படவுள்ளது

இதற்கான நிதி யாழ்கல்வித் திணைக்களத்தினல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் திரு எஸ். அருள் சுப்பிரமணியம் தெரிவுத்தார்.

## புதிய நீதிபதி

(வல்வெட்டித்துறை)

சாவகச்சேரி மாவட்டநீதிபதி திரு. பொ. பாலவடிவேல் யாழ் மாவட்ட நீதிபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். யாழ்மாவட்ட நீதிபதி திரு சுந்தரலிங்கம் வெளிநாடு சென்றுள்ளதால் இவர் இங்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## கோழிப்பண்ணை

(நாயன்மார்கட்டு)

யாழ்மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் மீண்டும் கோழிப்பண்ணை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பயிற்சி நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுவைக்க சில சுவையான செய்திகள்

### தீயணைப்புக் குப்பிகள்

நெருப்புப் பிடித்து அதனல் ஏற்படும் அபாயத்தினைத் தடுக்க தீயணைப்புக் குப்பிகள் வழக்கத்திற்கு வந்துவிட்டன. ஆனல் அவை எடைமிக்கதாய் கையோடு எடுத்துச் செல்ல முடியாததாய் உள்ளன. எனவே தீ ஏற்பட்டவுடனே அவற்றைப் பயன்படுத்த முடியாமல் போய் விடுகின்றது எனவே உடனே எடுத்துச் செல்ல வசதியாக 25 செ மீ உயரம் 500 கிராம் எடை 5 செ. மீ குறுக்களவு ஆகியவற்றைக் கொண்ட தீயணைப்புக் குப்பிகளை வடிவமைத்து அவற்றைப் பயனுக்குக் கொண்டு வந்துள்ளது தெற்கு இங்கிலாந்தில் உள்ள அமோரைட் கம்பனி லிமிடெட் என்ற கம்பனி படைவீரர்கள், நிலத்தடியில் பணிபுரிவோர், சுரங்கத் தொழிலாளிகள், வெடிமருந்துத் தொழிற்சாலையில் பணிபுரிவோர் போன்றோர் இதனைத் தங்கள் பெல்டில் கட்டிக் கொண்டு நெருப்புப் பிடித்தால் என்ன செய்வது என்று அச்சமின்றிப் பணியாற்றலாம். இது தற்போது பல நாடுகளிலும் பயன்பாட்டிற்கு வந்துள்ளது

● ●

### மேதைகளின் குணம்

பொறுமை விடாமுயற்சியுடன் செயலாக்கம் ஆகியன மேதையாக ஒருவரை உருவாக்கி விடுகின்றன. பரம்பரைத் தன்மை அல்லது திறமைதான் சிறந்த அறிவாற்றலை உண்டு பண்ணுகின்றன என்ற உளவியலாளரின் கருத்து மாறியுள்ளது பிள்ளைகளில் சிறந்து இருப்பவர்கள் வாழ்க்கையில் அவ்வாறே இருப்பதில்லை பள்ளியிலிருந்த திறமைக்கும், வேலைக்குச் சென்று வெற்றிகரமாக விளங்குவதற்கும் சம்பந்தம் கிடையாது புதியன படைக்க விரும்புவது செயல்ஊக்கம், வெற்றியடைய முனைந்து செயற்படுவது ஆகியன மேதைகளாக உருவாக்க வழிவகுக்கின்றன என்று அண்மைக்கால உளவியல் ஆய்வு முடிவுகளில் இருந்து தெரியவருகிறது.

● ●

### எரிமலையில் இருந்து மின்

எரிமலையில் இருந்து மின்சாரம் தயாரிக்கலாமா என்பது குறித்து சோவியத் வல்லுநர்கள் ஆராய்ந்து வருகின்றனர் அடுத்த சில ஆண்டுகளில் எரிமலைகள் மீது உயரழுத்த மின்சார உற்பத்தி நிலையங்களை அமைக்க சோவியத் விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர் விட்டா என்ற விஞ்ஞான தொழில் நுட்ப அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். எரிமலைகளிலிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதன் மூலம் எரிமலைகள் வெடிப்பதைத் தடுக்க முடியும் எரிமலை சரிவில் தோண்டப்படும் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் நிலவாயு மற்றும் நீராவியைப் பயன்படுத்தி மின் உலைகளை இயக்குவதன் மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: வாக்கு கலகம், பணமுடை, மாதாவழி கவலை, வாகன மாற்றம், புதுத் தொழில், வணிகர்கள் கவலை, இளைய சகோதரவழி கவலை.

இடபம்: மூத்த சகோதரர் வழி நன்மை, வாகன சுகம், ஆடையாபரண சிறப்பு, தூர தேசம் போனவர்கள் வருகை, பணவரவு.

மிதுனம்: உயர்பதவி, இராஜ மரியாதை, நேத்திரயோகம், புதுவாகன சேர்க்கை, தெய்வ ஆசி, மாமன்வழி பொருள், கலைஞர்கள் கௌரவம்.

கடகம்: பிரிந்த காதலர் ஒன்று சேருவர், குடும்ப மகிழ்ச்சி, பிறர் உதவி கிடைக்கும், பிதா வழி நன்மை, பிரயாண சுகம்.

சிங்கம்: உடல் ரோகம், பண விரையம், இராஜபயம், பெண்களாலுதவி, பிரிந்தவர் வருகை, புதுத் தொழில், திருடர் பயம்.

கன்னி: விவாக நிட்சயம், மாமன்வழியுதவி, பெரியோராசி, வணிகர்கள் கடல் தொழில் செய்வோர் இலாபம், மூத்த சகோதரவழி நன்மை.

துலாம்: வாகன மாற்றம், சத்துரு ஜெயம், தூரத்து பிரயாணம், வாக்கு கலகம், பெண்களாலுதவி.

விருச்சிகம்: புதுத் தொழில், புத்திர சுகம், இளைய சகோதரவழியுதவி, பிதா மாதா வால் சுகம், பூமி மனை சேர்க்கை.

தனுசு: மாதாவழி நன்மை, வாகன இலாபம், வணிகர்கள் அகமகிழ்ச்சி, தூரத்து செய்தியால் மகிழ்ச்சி, தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

மகரம்: வாக்கு வசிகரம், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர் ஒன்று சேருவார்கள், பணவரவு.

கும்பம்: மனையில் சுபகாரியம், தொழில்பேறு, காதலர் ஒன்று சேருவர், வெளியூர் செய்தியால் நன்மை.

மீனம்: மனக்கிலேசம், இராஜ பயம், உடல்ரோகம், உதவிக்கு உபத்திரவம், வாகன மாற்றம், தூரதேசம் போனவர் வருகை.

★ யாழ். சோதிடர் ச. அரியநாயகம்

# இந்திய இராணுவ தளங்கள் மீது பறந்த அமெரிக்க விமானங்கள் மறித்து பிடிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் மேற்கு கட்ச் பகுதியில் பாதுகாப்பு அமைப்புகளுக்கு மேலாக பறந்த இரு அமெரிக்க விமானங்களை இந்திய விமானங்கள் வழிமறித்து தரையிறக்கியுள்ளன. இருவிமானங்களிலும் இருந்த நான்கு விமானிகள் இந்திய புலனாய்வு துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்படடுள்ளனர். இவ்விமானிகளில் இருவர் அமெரிக்கர், இருவர் மே. ஜேர்மனியர். கடந்த வெள்ளி கட்ச் பகுதி பாதுகாப்பு நிலைகளுக்கு மேலாக பறந்த இவ்விருவிமானங்களும் ரேடாரில் தெரிந்ததையடுத்து இந்திய போர் விமானங்கள் இவற்றை வழிமறித்து தரையிறக்கின. விசாரணைகள் தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

## பொது வேலைநிறுத்த முஸ்தீபு தெற்கில் கறுப்பு தினம்

ஜனாதிபதியின் பிறந்த நாளான நேற்று தென்இலங்கையில் கறுப்புத்தினம் அனுஷ்டிக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

அரச திணைக்கள, ஊழியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இ. போ. ச. வேலை நிறுத்தம் நேற்றும் பதின்மூன்றுவது நாளாக தொடர்ந்தது.

இதை சாதகமாக பயன்படுத்தி பொது வேலை நிறுத்தம் ஒன்றிற்கு சில தொழிற் சங்கங்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது.

வேலை நிறுத்த ஊழியர்கள் திங்கட்கிழமைக்கு முதல் வேலைக்குத் திரும்பாவிட்டால் வேலையை இழந்ததாக கருதப்படுவார்கள் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## இந்திய பொருள் பகிஷ்கரிப்பால் கள்ளக்கடத்தல்காரர் திகைப்பு

(கொழும்பு)

ஜே. வி. பியின் இந்திய பொருள் பகிஷ்கரிப்பு நடவடிக்கையால் கள்ளக்கடத்தல் காரர்பாடும் பெரும் திண்டாட்டமாகவுள்ளது. என சுங்கப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கிருந்து யப்பான் மற்றும் வெளிநாட்டு பொருட்களை படகுகளில் கடத்திச் சென்று அங்கிருந்து இந்திய பொருட்களை கொண்டு வந்த இவர்கள் இனிமேல் என்ன செய்வது என்று யோசிக்கிறுர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### க. பொ. த....

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் அவர்களின் சொந்த முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈரோஸ்...

கலை தெல்லிப்பளைச் சந்தியில் வைத்து கைதான இரு ஈரோஸ் இயக்க உறுப்பினர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## காலமானர்

### வைத்திலிங்கம் கனகலிங்கம்

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் நித்திய கல்யாணி ஜுவல்லரி பங்காளரும், கனகமரக்காலை மண்கும்பான் உரிமையாளரும், மண்கும்பான் வீரசக்தி விநாயகர் ஆலய பெறுநர் சபை பொருளாளருமான வைத்திலிங்கம் கனகலிங்கம் அவர்கள் 21-06-89 அன்று அகால மரணமானுர். இவர் மண்கும்பான் மேற்கு வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் புதல்வரும், மண்கும்பான் மேற்கு சோமசுந்தரம் காலம் சென்ற பூங்காவனம் தம்பதிகளின் மருமகனும், குணேஸ்வரியின் அன்புக் கணவரும், செயந்தன், குகப்பிரியா, நித்தியா ஆகியோரின் அன்புத்தந்தையும் குமாரசூரியர் (ஜேர்மனி) குணரட்ணம் (ஆசிரியர் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி) பரராசசிங்கம் (வர்த்தகர் அக்குறுஸ்) திருஞானம் (வர்த்தகர் அக்குறுஸ்) மகாலிங்கம் (கனக மரக்காலை மண்கும்பான்) மகேஸ்வரி யோகநாதன், கனகேஸ்வரி யோகநாதன் அரசரெட்ணம் (கனடா) அன்னலெட்சுமி வேலும் மயிலும் (பிரான்ஸ்) மயில்வாகனம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், வர்ணகுலசிங்கம் (லொறி ரான்ஸ் போட் மண்கும்பான்) பரமேஸ்வரி இராசலிங்கம், சிவலிங்கம் (சோதி ஜேர்மனி) ஜெயலெட்சுமி குமாரசூரியர், சரஸ்வதி குணரட்ணம், மங்கையற்கரசி பரராசசிங்கம், நிர்மலா திருஞானம், மல்லிகாதேவி மகாலிங்கம், யோகநாதன் (கனடா) யோகநாதன் (பங்காளர் நித்திய கல்யாணி ஜுவல்லறி யாழ்ப்பாணம்) வேலும்மயிலும் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஜெயலட்சுமி, இராசலிங்கம் (உரிமையாளர் சிறி முருகன் ஸ்ரோர்ஸ் கரம்பன்) ஆகியோரின் சகலனும் ஆவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் 24 - 06 - 89 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை சாட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்ருேம்.

தகவல்: ந. யோகநாதன்

06253

# நிவாரணம் என்ற பெயரில் வெளிநாட்டுபணம் மோசடி

வடகிழக்கில் வன் செயலினுல் பாதிக்கப்பட்டு அகதிகளானேருக்கு நிவாரணம் வழங்குவதற்கென வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் நிதியை இங்குள்ள சில நிறுவனங்கள் பெருமளவில் மோசடி செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு பாதிக்கப்பட்ட கட்டடங்கள், பகுதிகளை புகைப்படம் பிடித்தும், பத்திரிகைகளில் வரும் செய்திகளை கத்தரித்தும் வெளிநாடுகளில் உள்ள சமூக நல ஸ்தாபனங்களுக்கு அனுப்பும் இந்த போலி நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிக்கும் பொறுப்பை தாங்கள் ஏற்றிருப்பதாகவும் அதற்கு உதவி செய்யுமாறும் வெளிநாட்டு அமைப்புக்களிடம் கோருகின்றனவாம்.

அத்துடன் நிவாரண மளிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல், நிவாரணமாக தேவைப்படும் பணத்தின் அளவு போன்ற விபரங்களையும் இந்த நிறுவனங்கள் தேவைக் கேற்ப தயாரித்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அனுப்பி வருகின்றனவாம்.

இந்த விபரங்களை உண்மையென நம்பி வெளிநாட்டு ஸ்தாபனங்கள் அனுப்பும் நிதி உதவியில் சிறிது தொகையை பாதிக் கப்பட்டவர்களுக்கு வழங்கிவிட்டு பெரும் பகுதியை இவை தாம் அபகரித்துக் கொள்கின்றனவாம். இவ்வாறே தொடர்ந்தும் நிதியை பெற்று மோசடி செய்யும் முயற்சியில் பல நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன எவனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### 8 ரூபாவிற்கு...

மூலம் நாற்றியெண்பது மெட்ரிக் தொன் கோதுமை மா இங்கு வந்து சேர்ந்தது.

இன்று மேலும் இருநூற்றி எண்பது மெட்ரிக் தொன் கோதுமை மா ரயில் மூலம் இங்கு வந்து சேரவுள்ளதாக உணவுத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### அமைதிப்படை...

வடகிழக்கு மாகாணங்களை நிர்வகிக்க முடியாது.

இந்தியப்படைகள் வாபஸ் பெறப்பட்ட பின்னரே வடக்கு கிழக்கில் அமைதி ஏற்படும். முன்னர் வடக்கு கிழக்கில் இருந்த அமைதியின்மை, இந்தியப்படைகள் இலங்கை வந்து இறங்கியதும் தெற்கிற்கும் பரவிவிட்டது.

இலங்கை - இந்திய உறவு பேணப்பட வேண்டுமாயின் இந்தியப்படை வாபஸ் அவசியமாகிறது பேச்சுவார்த்தை மூலம் வடக்கு கிழக்கில் அமைதி ஏற்படுத்த எனது அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. இந்தியா இராணுவ நடவடிக்கையினுல் செய்ய முடியாததை பேச்சுவார்த்தைகள் மூலம் செய்ய அரசாங்கம் முடிவெடுத்துள்ளது,

இலங்கையின் விருப்பத்துக்கு மாருக இந்தியா தனது படைகளை இங்கு வைத்திருப்பது உலகநாடுகள் கவனத்தில் கொள்ளவுள்ளன. இதற்கு முன்னர் இந்தியப்படை வெளியேறுவது நல்லமுடிவாகும்.

இந்திய-சோவியத் நட்புறவு உடன்படிக்கை போன்று இந்திய-இலங்கை நட்புறவு உடன்படிக்கை செய்யலாம். இந்தியப்படை இங்கிருப்பதால் இலங்கையின் சுதந்திரம் அர்த்தமற்றதாகிவிட்டது.

எமது பிரச்சினைகளை நாம் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்காததினுலேயே இந்தியப் படை இங்குவந்தது. நாட்டில் குழப்பம் இருந்தால் இந்தியப் படை வாபஸ் பின்னடையும். இதனுல் மக்கள் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனுதிபதி தனதுரையில் கேட்டுக்கொண்டார்.

### யாழ். கொழும்பு..

இறக்கப்பட்ட பயணிகளுக்கு எவ்வித இடையூறுகளும் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. பயணிகள் வேறு பஸ் வண்டிகளில் பயணத்தைத் தொடர்ந்தனர்

### முகமூடி...

நடைபெற்ற அவசரகாலச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசினுர்.

புத்தளம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறு ஐ.தே கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

புத்தளம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களுக்கு இவர்களும் காரணமாக இருந்துள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய அல்ஹாஜ் அஸ்வர். பொதுமக்களின் அதிருப்தியைப் பெற்றுள்ள இவ் இருவரும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

சீருடை அணிந்தவர்களால் இப்பகுதி மக்கள் தாக்கப்பட்டசம்பவங்கள் இனிமேலும் தொடராதிருக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் அமைச்சர் விஜேரட்ணவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இன்று ..

பது குறித்து எதுவும் அறிவிக்கப்படவில்லை. கொழும்பிலிருந்து இன்று ரயில் வந்தால் மட்டுமே நாளை காலை கொழும்பிற்கான யாழ்தேவி ரயில் சேவை நடைபெறும் என புகையிரத நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான சரக்கு ரயில் சேவை நேற்று பாதிப்பின்றி நடைபெற்றது.

### யாழ், மாவட்டத்திற்கு...

இதேவேளை இந்த இருபத்தி ஐயாயிரம் ஆசிரிய பயிலுநர்களை தெரிவதற்கான விண்ணப்பங்களை விரைவில் வர்த்தமானி மூலம் கோருவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

### இருவருட...

சம்பள முற்பண கடனை வழங்குவதற்கு தற்பொழுது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்ட பணம் வழங்கப்பட்டதும் அடுத்து கிடைக்கும் நிதியொதுக்கீட்டைக் கொண்டு எஞ்சிய விண்ணப்பதாரிகளுக்கும் இக்கடன் வழங்கப்படுமென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## காலமானர்

### திரு. சிறில் F. சுவாம்பிள்ளை

திரு. சிறில் F. சுவாம்பிள்ளை (சம்பத்தரிசியர் கல்லூரி முன்னுள் ஆசிரியரும், தற்போதைய வின்சர் தியேட்டர் முகாமையாளரும்) 23-06-1989 அன்று அகால மரணமானுர். இவர் திரு. A. சுவாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற ஜொய்ஸ், பவளம் (ஆசிரியை, யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புக் கணவரும், வினித்தா, பிரபாகரன், நரேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரியன், தமயந்தி, வத்சலா ஆகியோரின் மாமனுரும், சரூே நிக்கலஸ், அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (மேற்றிராணியார் திருகோணமலை, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னுரின் பூதவுடல், ஞாயிற்றுக்கிழமை (25-06-89) காலை 9.30 மணிக்கு அன்னுரின் இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

71, 4-ம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி சுவாம்பிள்ளை

06256

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62 ஏ இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 24-06-89 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது